**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 08/2018**

நாள்: 08.10.2025.

பெயர்: சரவணன் (பி.வா.சா.1) த/பெ: கருணாநிதி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) நான் சென்னையில் எலெக்ட்ரிக்கல் கான்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறேன். எனது மூத்த சகோதரரான 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அஞ்சாபுலி எனது இளைய சகோதரர் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தற்போது ஈரோட்டில் உள்ளார். 4ம் பிரதிவாதி எனது தாயார், அவர் உயிருடன் உள்ளார். எங்கள் குடும்ப சொத்தைப் பொறுத்து பாகம் பிரியவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி அஞ்சாபுலி எதிர்வழக்குரையோ, எதிரிடை பாத்தியமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை கருணாநிதி 2007 ஆம் ஆண்டு இறந்தார். எனது தந்தை இறப்பிற்கு பின்னர் தற்போது வரை எங்கள் குடும்ப சொத்துக்களின் பட்டா எனது தந்தை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வாதியின் தந்தை கலியபெருமாளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கலியபெருமாள் உயிருடன் இல்லை என்றால் சரிதான், அவர் இறந்து சுமார் 15 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை, இருக்கலாம்.

2) கலியபெருமாளுக்கு 3 மகன்கள், 4 மகள்கள் வாரிசுகள் ஆவார்கள். கலியபெருமாளின் வாரிசுகளில் மூத்தவர் வாதி என்றால் சரிதான். வாதி குடும்பத்தில் பாகம் பிரியவில்லை என்றால் சரியல்ல, பிரிந்துவிட்டது. எப்போது பிரித்தனர் என்றால் எனக்கு தெரியாது. வாதியின் குடும்பம் எங்களுக்கு பங்காளிகள் என்றால் சரிதான். எனக்கு 1, 3 பிரதிவாதிகளை தவிர்த்து 2 சகோதரிகள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 2 சகோதரிகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். வாதியின் சகோதரர்களுள் ஒருவர் முருகன் என்றால் சரிதான். மேற்படி முருகன், என் மீதும், எனது சகோதரர் 1ம் பிரதிவாதி மீதும் CC.No.53/2023 என்ற குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அது பொய் வழக்கு. மேற்படி குற்ற வழக்கில்

எனக்கும், எனது சகோதரருக்கும், தலா ரூபாய் 10,000/– அபராதமும், 1 மாதம் சிறை தண்டனையும் வழங்கப்பட்டது என்றால் சரிதான், மேல்முறையீட்டில் அந்த தண்டனை ரத்து செய்யப்பட்டு, மேற்படி அபராதத்தையும் திரும்ப பெற்றுக்கொண்டோம். மேற்படி மேல்முறையீடு எனக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டில் வாதியின் சகோதரர் முருகன், என் மீதும், என் தாயார் மீதும் குற்ற வழக்கு தாக்கல் செய்து, தற்போது ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

3) எங்களுக்கும், வாதி குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் வாதி குடும்பத்தில் சிலரிடம் பேசுவோம், சிலரிடம் பேச மாட்டோம். தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.345/17 என்றால் சரிதான். தாவா சொத்தின் மேல்புறம், கீழ்புறம் நத்தம் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் நத்தம், தென்புறம் நத்தம் இல்லை. 1996 வருட வாக்கில்தான் அனுபவத்தைப் பொறுத்து நத்தம் பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் மேல்புறத்தில் வடபுறம் உள்ள சொத்தின் சர்வே எண்.345/16 என்றால் சரிதான். சர்வே எண்.345/16 ற்கு பட்டா என் தந்தை பெயரில் உள்ளது. சர்வே எண்.345/16 ல் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.345/16 ல் நேர் தென்புறம் சர்வே எண்.345/15 அதற்கு தென்புறம் சர்வே எண்.345/14 என்றால் சரிதான். சர்வே எண்.345/15 என்பது அரசு ஆவணங்களில் புறம்போக்கு என்று உள்ளது என்றால் தற்போது தான் புறம்போக்கு என்று மாறி உள்ளது, ஆனால் அது எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. 1996 ஆம் ஆண்டிலிருந்தே சர்வே எண்.345/15 புறம் போக்கு என்று தான் அரசு ஆவணங்களில் உள்ளது என்றால் சரியல்ல, 5 ஆண்டுகளுக்கு முன்னர் தான் அவ்வாறு மாற்றப்பட்டது. சர்வே எண்.345/15 எங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.345/15 ற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாத்தா ஆறுமுகம் பெற்ற கிரைய பத்திரமும், வீட்டு வரி ரசீதுகளும் தாக்கல் செய்துள்ளேன்.

4) நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் அனைத்தும் சர்வே எண்.345/16 ல் உள்ள வீட்டிற்கானவை என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீதுகள் அனைத்தும் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்.345/14 என்பது அரசு ஆவணங்களில் காலி நத்தம் என்று உள்ளது என்றால் காலி மனை என்று உள்ளது. மேற்படி சர்வே எண்.345/14 ற்கு யார் பெயரிலும் பட்டா இல்லை என்றால் சரிதான், ஆனால் அது எங்கள் அனுபவத்தில் உள்ளது. சர்வே எண்.345/14 எங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு எங்களிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல, கிரைய பத்திரமும், வீட்டு வரி ரசீதுகளும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள கிரைய பத்திரமும், வீட்டு வரி ரசீதுகளும் சர்வே எண்.345/14, 345/15 ஆகியவற்றிற்கு சம்பந்தம் இல்லாதவை என்றால் சரியல்ல.

5) 1996 ஆம் ஆண்டு பட்டா வழங்குவதற்கு முன்பு அனைவருக்கும், சர்வே நோட்டீஸ் வந்தது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனது சகோதரர் 1ம் பிரதிவாதிக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சர்வே எண்.345/17 ற்கு பட்டா ஏற்கனவே வாதியின் தந்தை கலியபெருமாள் பெயரில் இருந்தது என்றால் சரிதான், தற்போது வாதி மற்றும் அவரது தந்தை பெயரிலும் கூட்டாக உள்ளது. தாவா சொத்திற்கு மேல்புறத்தில் வடபுறம் உள்ள சர்வே எண்.345/16 ற்கு பட்டா எனது தந்தை கருணாநிதி பெயரில் உள்ளது, அதனை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து, அதற்கு மேல்புறம், கீழ்புறம் உள்ள சொத்துகளுக்கு 1996 ற்கு முன்பு பழைய சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பழைய சர்வே எண்.88/5 என்றால் எனக்கு தெரியாது.

6) தாவா சொத்தில் கூரை வீடு உள்ளதா என்றால் தற்போது இல்லை, வாதியின் தந்தை கலியபெருமாள் உயிருடன் இருந்த காலத்தில் கூரை வீடு இருந்தது. கலியபெருமாளின் இறப்பிற்கு பின்னர் மேற்படி கூரை வீட்டில் அவரது மனைவி வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல, கலியபெருமாள் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி கூரை வீட்டில் கலியபெருமாளும், அவரது மனைவியும் அங்கு வாழ்ந்து வந்தனர். கலியபெருமாள் மனைவி கடந்த மூன்று வருடங்களாக தனது மகள் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்றால் மூன்று வருடங்களாக அல்ல,

கலியபெருமாள் இறந்ததிலிருந்து அங்கு தான் வாழ்ந்து வருகிறார்.

7) தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.85 என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து பள்ளமாக இருக்கும், மேல்புற சொத்து 345/16 மேடாக இருக்கும் என்றால் தற்போது அவ்வாறாக உள்ளது, 2 ஆண்டுகளுக்கு முன்னர் மண் அடிப்பதற்கு முன்பு சமமாக இருந்தது. தாவா சொத்தின் சர்வே எண்.345/17 ற்கு வில்லங்கம் எடுத்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வில்லங்கம் எடுத்து பார்த்ததில் தாவா சொத்தை ஈக்விட்டாஸ் வங்கியில் அடமானம் வைத்து வாதி கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது எங்களுக்கோ, எங்கள் முன்னோர்களுக்கோ எந்த காலத்திலும் பாத்தியமும், அனுபவமும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. பட்டா படியும், அனுபவம் படியும் தாவா சொத்தை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதியின் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் குடும்ப மேனேஜர் என்ற முறையில் இவ்வழக்கை அவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/க.சரவணன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.